## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. லங்கா கம்பனியின் ("கம்பனி") 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 இன் பிரகாரம் கம்பனியால் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு | 2024/2025 கணக்கு ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் பிற் போட்ட வரி கணிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |

கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.1.5 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கணக்கீட்டுக் கொள்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையை அமுல்படுத்து வதற்கு முடியாதிருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட் டுள்ளது. | கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட காணிக்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 7,207,564,490 கிடைக்க வேண்டிய மீதியாகவும், அந்த சொத்துக்கள் அகற்றிய தால் உருவான தேறாத இலாபம் ரூபா 3,389,116,771 மீள் மதிப்பீட்டு இலாபமாக 2022/2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு அவ்வாறு பெற வேண்டிய தொகை பெறுவனவுகள் நிச்சய மற்றதாக இருந்ததன் காரணமாக அப் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்க ளில் இருந்து அகற்றும் போது ரூபா 7,207,564,490 ஆன மொத்தப் பெறுமதியும் மீள் மதிப்பீட்டு ஒதுக்க சீராக்கத்தின் காரணமாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 3,818,447,719 இனால் குறைத்தும் நிறுத்தி வைத்த உழைப்புக்கள் அப்பெறுமதியால் அதிகரித்தும் காண்பிக்கப்டிருந்தது. | நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்ப தற்காக வழங்கப் பட்ட 06 ஏக்கருக்காக கிடைக் வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 7,207,564,490 பெறுமதி 2022/23 நிதிக் கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய இழப்பீட்டுப் பணமாக காண்பிக்கப்பட்ட போதிலும் 2023/24 கணக்காண்டின் போது அது கிடைக்காதிருந்ததாக பொது முயற்சிகள் திணைக்களம் கூறியிருந்தமையால் நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றும் போது மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் எதிர்வரும் கணக்காண்டின் போது சரி செய்யப்படும் | நிதிக்கூற்றுக்களில் சரியான சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கம்பனியால் Ceylon Hotel Corporation இல் முதலீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 240,000 | நிதிச் சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் | ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் பங்குரிமைக்குரிய ஆரம்ப மூலச் சான்றிதழ் தொலைந்திருந்தமையால் பங்குச் சான்றிதழின் பிரதியொன்றை வழங்குமாறு ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் செயலாளரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | நிதிச் சொத்துக்களின் உரித்தை உறுதிப் படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,345,094 ஆன வியாபார பெற வேண்டிய மீதி அறவிடப்படாதிருந்ததுடன் 10 வருடங்களை விஞ்சிய ரூபா 3,013,359 செலுத்த வேண்டிய மீதி தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. வழங்குநர் நிறுவனமான Tuffline நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,013,359 தொகை இதுவரை தீர்த்துவைத்திருக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்துவைத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் | | | |

கைந்நூல்

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 3.2 ஆம் பிரிவு | கம்பனியின் ஆட்சேர்த்தல் நடைமுறை மீளாய்வாண்டு வரையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் இருந்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு 40 நிரந்தர உத்தியோகத் தர்கள், ஒப்பந்த அடிப்படையில் 10 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மனிதவளங்கள் நிறுவனம் ஒன்றிலிருந்து 40 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 57,448,854 சம்பளம் மற்றும் வேதனங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | பல சந்தர்ப்பங்களின் போது நிறுவனத்திற் கான ஊழியர் எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்த்தல் நடை முறை அங்கீகரித்துத் தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிறுவனம் தொடர்பான எடுக்கப்படுகின்ற கொள்கை ரீரியான தீர்மானத்தின் பிரகாரம் தேவைாய நடவடிக் கைகளை மேற் கொள்வதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்த்தல் நடைமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.11 ஆம் பிரிவு | கம்பனிக்காக நாடு முழுவதையும் மேவுகை செய்யும் வகையில் விநியோகித்தல் இணைப்பு முகவர் ஒருவர் 2024 சனவரி 04 ஆம் திகதி முதல் 05 வருட காலத்திற்காக பெறுகை நடை முறைகளுக்குப் புறம்பாக தெரிவு செய்யப்பட்டிருந்ததார். | விநியோகித்தல் முகவர் தேவையாக இருந்ததாக பத்திரிகை அறிவித்தல் மற்றும் பல்வேறு முறைகளின் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தரப்பினர் ஆகக் குறைவாக இருந்ததன் காரணமாக தனியார் நிறுவனம் ஒன்று ஊடாக விநியோகித்தல் முகவர் நிறுவனத்தை தொடர்பு படுத்தி பீசீசீ உற்பத்தி விற்பனை செய்தல் / விநியோகித்தல் உற்பத்தி விற்பனை தொடர்பில் நியாயமாக இருந்தமையால் அந்த நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் விநியோகித்தல் இணைப்பு உத்தியோகத்தர் கள் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2024 ஒக்டோபர் 15 ஆம் திகதி அதாவது 04 | கம்பனியின் கணக்குகள் Manual முறையிலே தயாரிக்கப்படுகின்றமை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| மாதங்களும், 15 நாட்களும் தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டதுடன் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையும் வருடாந்த அறிக்கையின் வரைவொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | யால் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மாற்றத்தின் காரணமாக 2023/2024 இற்குரிய நிதிக் கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் தாமதமடைந்திருந்தது. | குறித்துரைத்த திகதிக்கு முன்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 155,729,211 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 149,169,834 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,559,377 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது நிருவாகம் மற்றும் விநியோகித்தல் செலவினம் ரூபா 38,474,266 இனால் அதிகரித்திருந்த போதிலும் சர்க்கார விற்பனை வருமானம் ரூபா 82,354,591 இனால் அதிகரித்திருந்ததுடன் சுத்திகரிப்பு வருமானம் ரூபா 73,339,369 இனால் குறைவடைந்தமையும், விற்பனை தேறிய வருமானம் ரூபா 9,015,222 இனால் அதிகரித்தமையும், விற்பனைக் கிரயம் ரூபா 23,334,704 இனால் குறைவடைந்தமையும் இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சந்தையில் சவர்க்கார விலை எதிர்பார்க்காத வகையில் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக விற்பனை செய்வதற்கு முடியாதிருந்த சவர்க்காரக் கட்டிகள் 57,700 இலக்கிடப்பட்ட விலையினை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக கம்பனிக்கு ரூபா 1,525,346 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கொவிட் சந்தர்ப்பத்தில் சவர்க்கார விலை விரைவாக அதிகரித்து உற்பத்தி இருப்புக் களில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விட அதிக வருமானம் பெறப்பட்டதுடன் விலை குறைவடைந்த சந்தர்ப்பத்தில் எரிர்பார்க்கப்பட்ட வருமானம் குறைவடைந் துள்ளது. | கேள்வி தொடர்பாக சரியாக எதிர்வுகூறி உற்பத்தி திட்டமிடப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கம்பனிக்கிடையே ஏற்படுத்தப் பட்ட கொடுக்கல் வாங்கல் உடன்படிக்கை யின் பிரகாரம் | பீசீசீ நிறுவனத்திற்கு உரியதாக காணப்பட்ட குணசிங்கபுர வீட்டிற்குரிய வழக்கு நடவடிக்கைகள் காணப்பட்டமையால் அதன் | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி வீட்டின் உரித்தைக் கையேற்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | குணசிங்கபுர டயஸ் பிரதேசத்தில் வீடொன்று 1988ஆம் ஆண்டில் கம்பனிக்கு கையேற்கப்பட்டிருந்தது. கம்பனியால் 2024 யூலை 31 வரை மாதாந்தம் ரூபா 160 வீதம் ஆன வீட்டு வாடகை தவணையொன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டதுடன் 1998 ஆம் ஆண்டு முதல் இந்த வீட்டில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் வசித்து வருகின்ற போதிலும் அந்த குடியிருப்பாளர்களை அகற்றி வீட்டின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிததை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ரூபா 160 வீதம் வாடகை தவணையொன்று செலுத்த வேண்டி ஏற்பட்டது. எனினும் அந்த வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தியடையாமல் நிறுத்தப்பட்டமையால் 2024 யூலை 31 ஆம் திகதி முதல் இந்த வாடகைத் தவணை செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேங்காணையை உள்ளடக்கிய 09 உற்பத் திகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்ட போதும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி தவிர எந்தவொரு உற்பத்திக்காகவும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் நியம சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல உற்பத்திகளுக்கும் நியம சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்துமாறு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சகல உற்பத்திகளுக்காகவும் நியமச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு மெய்மை ஆய்வின் பிரகாரம் சவர்க்கார உற்பத்தி பிரிவில் கைத்தொழில் எண்ணெய் (Industrial Oil) கிலோ கிராம் 17,691.5 காணப்பட்டபோதும் அந்தப் பிரிவின் தகவல்களின் பிரகாரம் அந்த அளவு கிலோ கிராம் 17,021.7 ஆனமையால் 669.8 கிலோ கிராம் வேறுபாடு காணப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 75 வருட அளவிலான காலத்தில் தாங்கியில் சில பகுதிகள் உடைந்தமையினால் வேறுபாடு ஏற்பட முடியும். இதனை சரி செய்து கணிப்பிட்டு தாங்கியின் மொத்த எண்ணெய் இருப்பை அகற்றி கணிப்பிடுதல் வேண்டும். அதனால் மார்ச் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மை ஆய்வின் பிரகாரம் பெறப்பட்டுள்ள உள்ளபடியான இருப்பு கணிப்பீடு புத்தங்களில் உள்ள இருப்பாகும். | பௌதீக இருப்பு மற்றும் புத்தக இருப்புக்களுக்கிடையிலான வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 30 செயற்பா டுகளுக்கிடையே 21 செயற்பாடுகள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட | நிறுவனம் மீள் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட்டமையால் நிதி அமைச்சு மற்றும் மீள் கட்டமைப்பு பிரிவுகளினால் பீசீசீ நிறுவனத்திற்கு புதிய முதலீடு மற்றும் புதிய சில | நடைமுறை ரீதியலான நிலைமையினைக் கவனத்திற் கொண்டு திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. | நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப டுத்தாதிருக்குமாறு அறிவிக்கப் பட்டது. இந்த நிகழ்ச்சித்திட் டத்தை அமுல்படுத்துவதற்கு காணப்பட்ட நிதியை தீர்த்து வைப்பதற்கு கடன் மற்றும் நியதிச் சட்டக் கொடுப்பனவு களை தீர்த்து வைப்பதற்கும் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் அந்தக் கடன் தீர்க்கப்பட்டது. அதனால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சில பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 1,434,440,000 ஆன பாதீடு செய்யப்பட்ட வருமானத்தில் ரூபா 920,350,000 அதாவது 65 சதவீதம் மாத்திரம் உழைக்கப்பட்ட துடன் பாதீடு செய்யப்பட்ட தேய்காய் எண்ணெய் விற்பனை இயலளவு மெற்றிக்தொன் 1,278 ஆக போதிலும் அதில் 54 சதவீதம் ஆகும். அதாவது மெற்றிக்தொன் 693.8 அளவில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. ரூபா 99,590,000 ஆன மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட நிருவாக செலவினம் ரூபா 118,866,810 வரை அதாவது 119 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | 2024 சனவரி மாதம் முதல் தேய்காய் எண்ணெய்க்காக 18 சதவீத பெறுமதி சேர் வரியை விதித்தல் மற்றும் தேய்காய் எண்ணெய் விலை உயர்வடைந்து சென்றதன் அடிப்படையில் பாதீடு செய்யப்பட்ட விற்பனை வருமானத்தை விட உள்ளபடியான விற்பனை வருமானம் குறைவடைந்திருந் தமை மற்றும் ஊழியர் சம்பள செலவினம், ஊழியர் நலன்புரி செலவினங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு வரி அதிகரித்தமை நிருவாகச் செலவினம் அதிகரித்தமைக்கு காரணமாக இருந்தது. | வருமானம் மற்றும் செலவினங்களில் பாதீடு செய்யப்பட்ட அளவு மற்றும் உள்ளபடியான நிலைமைக்கிடையே முரண்களை குறைத்துக் கொள்வதற்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் பிரதான அலுவலகத்தில் காணப்பட்ட சவர்க்கார உற்பத்தி இயந்திரக் கூடம் 2012 ஆம் ஆண்டின் போது தோட்ட முதலீட்டு சபைக்கு உரிமையில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அது பொருத்தப்பட்ட திகதியில் இருந்து 2024 நவம்பர் 30 ஆம் திகதியில் வரையும் விளைவற்றுக் | 75 வருடங்கள் பழைமையான தோட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள இந்த இயந்திரம் தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. அது பொருத்தப்பட்டுள்ள கட்டிடத்தில் உள்ள வளங்கள் வங்கிக்கு உரித்தான ஏனைய இயந்திரப் பொறிமுறைகள் வங்கியினால் அகற்றப்படுகின்றமையால் எங்களின் அந்த இயந்திரம் மற்றும் அதற்குரிய | நிறுவனத்தின் சொத்துக்கள் வருமானம் உழைப்பதற்காக செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்பட்டது. | பகுதிகள் எமது உத்தியோகத்தர்களால் அகற்றப்படுகின்றது. இயந்திரத்தை மீண்டும் பயன்படுத்துதல் தொடர்பாக முகாமைத்துவம் இன்னும் தீர்மானம் எடுத்திருக்கவில்லை. | |

**3.5 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்குரிய 06 ஏக்கர் நிலப் பகுதி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது கொழும்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக நீதியமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்தக் காணி கொழும்பு மாவட்ட பிரதான மதிப்பீட்டாளரால் 2022 நவம்பர் 04 ஆம் திகதி ரூபா 7,229,173,000 தொகையில் இழப்பீடு மதிப்பீடு செய்யப்பட்டு கொழும்பு பிரதேச செயலாளரால் இழப்பீடு உறுதிப் படுத்தப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு இழப்பீடும் கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்திற்கு சொந்தமான காணியொன்று அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு கையேற்பதாயின் அதற்கான இழப்பீடு மற்றும் வட்டி செலுத்தாதிருக்குமாறு 2024 செப்டெம்பர் 26 ஆம் திகதிய PED/1/BCC/1/11(ii) ஆம் இலக்க என்ற கடிதம் மூலம் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தால் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |